International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 01 January to March 2020 www.irjtsjournal.org

# சங்க இலக்கியத்தில் பெண் வாயில்களின் ஆளுமைப் பண்புகள்

க. தனலெட்சுமி,
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதி)*
*ந.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை – 625019*

**முன்னுரை**

ஆளுமை என்பது Personality என்னும் சொல் 'Persona' என்னும் இலத்தீன் சொல்லிருந்து பிறந்தாகும். "தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் தனித்தன்மை ஆளுமை"[1] ஆளுமை என்றவுடன் நாம் நினைப்பது உடலமைப்பைத்தான். ஆனால் அது மட்டுமே ஆளுமை அல்ல. ஒருவரின் உள்ளே ஒளிந்திருக்கும் ஒவ்வொரு திறமையும் ஆளுமையாகும். ஆளுமை என்பது "ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு"[2]. என்று க்ரியாவின் தமிழ் அகராதி பொருள் கூறியுள்ளது. அக்காலக் கட்டங்களில், நடித்தவர்கள் நாடக மேடைகளில் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்திற்கு ஏற்றவாறு முகமூடி அணிந்து நடிப்பதைக் குறிக்கும். பர்சனாலிட்டி என்னும் சொல் தோன்றிய காலத்தில் ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்பதாக இருந்தது. ஆனால் இன்று ஆளுமை என்ற சொல் வழக்கில் பல பொருள்களில் எடுத்தாளப்படுகிறது. உளவியல் அகராதி, ஆளுமை என்றால் நன்றாகவும் அழகாகவும் திடமிக்கவராகவும் இயல்பு நேர்மை நட்புணர்வு, அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இறக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பண்புகளைக் கொண்ட இயல்பும் நடத்தையும் சேர்ந்த மொத்த கலவை என்று குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியத்தில் வரும் ஊடல் தீர்க்கும் வாயில்களாக பன்னிருவர் ஆவர். தொல்காப்பியர் இந்த வாயில்கள் யார் யார் எனப் பட்டியலிட்டிக் காட்டுகிறார். பன்னிருவாயில்களை

**"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,**
**பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**
**கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,**
**யாத்த சிறப்பின் வாயில்கள், என்ப"** தொல், பொருள். கற்பியல். நூ. 52

என்ற நூற்பாவில் தொல்காப்பியர், தொகுத்துக் கூறுகிறார்.

**"வாயில்கள்" பற்றிய விளக்கம்**

தலைவன் தலைவி இருவரும் இணைந்து இல்லறம் நடத்தும் போது இடையில் பிற பெண்களால் குறுக்கீடு ஏற்படுவதுண்டு. தலைவனிடம் காதல் பாராட்டுகிற அல்லது காமம் பூண்டு பழகும் பரத்தையர் தலைமக்களது இல்லறத்தில் குறுக்கிடுவர். அதனால் தலைமக்களிடையே சிக்கல் ஏழும். தலைவன் மீது தலைவி ஊடல் கொள்வதும் பின்பு ஊடல் தீர்க்கும் வாயில்கள் மூலம் அந்தப் பிணக்குத் தீர்வதும் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. களவிலும், கற்பிலும் தலைவன் தலைவியர்க்குத் துணை நிற்பவர்கள் வாயில்கள் ஆவர்.

ஐம்பொறி, கடை, கதவு, காரணம், திறம், தூது வாய்தல், தூவரம், என்று பல பொருள்களை 'வெள்ளி விழா அகராதி' குறிப்பிடுகின்றது.

தலைமக்கள் வாழ்வில் பிணக்கு, மனவருத்தம், ஊடல் ஏற்படும் போது பிரச்சனைகளை தீர்த்து வைப்பவர்கள் வாயில்கள் எனப்பட்டனர்.

"தலைவனையும், தலைவியையும் இடைநின்று கூட்டும் தூது"[3] என விளக்கம்

"காமக்கிழத்தியர் மாட்டு தலைவன் பிரிந்தமையால் தலைவிக்கு ஏற்பட்ட ஊடலைத் தீர்ப்பவர்கள் வாயில்கள்"[4] எனும் கருத்தை அபிதான சிந்தாமணி அளிக்கிறது.

சங்க இலக்கியத்தில் பெண் வாயில்களாக வரும் தோழி, தாயே, பாடினி, விறலியர், போன்றோரின் ஆளுமைப் பண்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தோழியின் ஆளுமைப் பண்புகள்

**"தோழி"** என்ற சொல்லுக்கு நம்பிக்கைக்கு உகந்தவள் என்று பொருள். தோழியைப் பல பெயர்கள் கொண்டு அழைப்பர். இகுளை, பாங்கி, சிலதி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்பனவாகும். "சங்க இலக்கியத்தில் தோழியின் அறிவுச் சிறப்பும் செயல் திறனும் காட்டப்படும் அளவிற்கு அவளுடைய அழகுச் சிறப்பு அதிகமாகக் காட்டப்பெறவில்லை. தலைவனும் தலைவியும் விளிக்கின்ற நிலையிலேயே அவளழகு காட்டப்பெறுகிறது."[5] தலைவன் தலைவியின் களவு, கற்பு என்னும் இருபாற்பட்ட காதல் வாழ்க்கையில் இயற்கைப் புணர்ச்சி தொடங்கி இல்லற வாழ்க்கையில் சிறந்தது பயிற்றல் வரை பல நிகழ்வுகளின் வழி அவர்தம் உணர்வுகளும் செயல்களும் பண்பு நலன்களும் தோழி எனும் முதன்மை வாயில்கள் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவியுடன் நிழல் போல வாழ்பவள் தோழியே. தோழியானவள் செவிலியின் மகள் என்பதனை,

**"தோழிதானே செவிலி மகளே" (தொல். களவி. 35)**

என்று தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியத்தில் காணப்படும் தோழி தனது நற்பண்புகளின் தனித்தன்மையில் சிறப்புற்று விளங்குகிறாள். தலைமைப்பண்பு, சொல்லாற்றல், பொறுப்புணர்ச்சி, நட்புணர்வு, அறத்தோடு நிற்றல், பணிவுடைமை முதலான பண்புகளை பெற்று உயர்ந்து நிற்கும் தோழி அகஇலக்கியங்களில் அச்சாணியாகச் செயல்படுகிறாள்.

மனித மனப்பான்மைகளின் அடிப்படையில் ஆளுமையை வகைப்படுத்துகிறார் யுங். அவை அகமுக மனப்பான்மை (Intravercy), புறமுக மனப்பான்மை(Extravercy), என பகுத்துக் காட்டுகிறார் தனிமனிதனின் மனதில் ஏற்படக் கூடிய ஊக்கத்திறன் உள்நோக்கிச் செல்லுமாயின் அவன் அகமுக ஆளுமை கொண்டவன் என்றும், வெளியுலகை நோக்கிச் செல்லுமாயின் அவை புறமுக ஆளுமை கொண்டவன் என்றும் விளக்குகின்றார்.

### சூழலுக்கு ஏற்றப்படி விளிப்பாக இருந்தல்

சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருந்து பகற்குறி, இரவுக்குறி அமைக்கின்றாள். களவு வாழ்வில் தலைவிக்கு நேரும் இற்செறிப்பு, நொதுமலர் வரைவு, வரும் வழியருமை, அச்சம் போன்ற இடர்பாட்டுச் சூழலை விளக்கி விரைவில் மணம் முடிக்குமாறு தலைவனை வேண்டுகின்றாள். "வரைவு கடாதல்" தோழியால் மட்டுமே நிகழ்த்தப்படுகின்றது. (நற். 135) இங்கு களவினை கற்பாக்கத் தோழி எடுக்கும் முன் ஏற்பாடு அவளது அறிவு நுட்பத்தினை காட்டுகின்றது, வரைவுகடாதலில் தன் உணர்ச்சிகளை நேர்முகமாகவும், சிறைப்புறமாகவும் தலைவனுக்கு புலப்படுத்துகிறாள். இதிலிருந்து தோழியின் செயல்பாடு புறமுக ஆளுமை வெளிப்படுவதை அறியமுடிகிறது.

**தோழியின் கடமை உணர்வு**

தலைவனுக்கும் தலைவிக்கும் வருகின்ற இடையூறுகளைப் பாதுகாத்தல் தோழியின் கடமை ஆகும். தலைவியைக் காணும் ஆசையால் இரவுப் பொழுதில், தலைவன் மலைகளையும், அருவிகளையும் கடந்து வருவான். அதனால் ஏற்படும் ஆபத்தை எண்ணி வருந்தும் தலைவியின் நிலையைக் கூறித் தலைவனுக்கு இரவுக்குறியை மறுத்து விடுவாள். அகநானூற்றில் தோழி தலைவனுக்கு கவலையுடன் இரவுக்குறி மறுக்கின்றாள் என்பதை

**"மன்றல் வேண்டிலும் பெறுகுவை ஒன்றோ**

**இன்றுதலை யாக வாரல்" (அகநானூறு 318)**

என்ற பாடலில் "திருமணம் உடனே செய்து கொள்ள விரும்பினாலும் செய்து கொள்க, இனிமேல் இரவுக்குறி வராதே" என்று கடுமையாக இரவுக்குறியை தோழி மறுக்கிறாள். இதன் மூலம் தோழியின் காலமறிந்து செய்யும் செயலை தோழியின் உயர்நிலையும் வெளிப்படுகிறது.

**அறிவுத்திறன்**

தலைவியைப் பிரிந்து சென்று மீண்டும் வந்த தலைவன் "யான் பிரிந்த காலத்தில் தலைவியை நன்கு ஆற்றுவித்திருந்தாய்" என்று தோழியைப் புகழ்ந்தான். இக்கூற்றால் பிறர் பாராட்டும் வண்ணம் தோழி அறிவுடன் செயல்பட்டாள் என்பது புலனாகிறது.

**"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**

**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**

**………………………………….**

**விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" (நற். 23)**

என்ற பாடலில் தோழியின் அறிவுத்திறனைப் பயன்படுத்தி காக்கைக்கு உணவு இட்டு அதன் வாயிலாக காகம் கரைய அது விருந்தினர் வரும்படி கரைகிறது என்று நிமிர்த்தம் காட்டித் தலைவியை ஆற்றுவிப்பதன் மூலம் தோழியின் அறிவுத்திறனை அறியமுடிகிறது,

ஆளுமையில் அறிவுதிறன் ஒரு முக்கியமான கூறு. ஒரு மனிதனின் ஆளுமை வெளிப்படுத்தும் முக்கிய காரணி அறிவு. அனைத்து மனிதர்களுக்கும் அதிகமாக அறிவு இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான அறிவு இருக்கிறது. அந்த அறிவின் வெளிப்பாடே ஆளுமை எனப்படும். அந்த வகையில் சங்க இலக்கியத்தில் தோழி அறிவுசார்ந்த ஆளுமை வாயிலாக விளங்குகிறாள். தலைவன் தலைவிக்கும் ஏற்படுகின்ற காதலை, தொடக்கத்திலிருந்து முடிவுவரை இடையே ஏற்படுகின்ற காதலை, மெல்ல மெல்ல நகர்த்து செல்கின்ற பெரும் பொறுப்பு தோழிக்கே உரியது. தோழி தம் அறிவுத்திறத்தினால் சந்திக்க இயலாத காதலர்களை சந்திக்க வைக்கிறாள். தோழியின் அறிவுக்கூர்மை பல்வேறு வகைகளில் தலைவன், தலைவிக்கு உதவுவதாகும். தொடர்ந்து வளர்ந்த காதல் சில இடையூறுகளால் தடை ஏற்படும் போது அக்காதலை வெற்றிகரமாக முடித்து வைக்கும் அறிவு தோழிக்கே உண்டு. சான்றாக

**"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்"** (குறுந், 18)

இப்பாடலில் தலைவனும் தலைவியும் காதல் புரிந்து அதன்பின் தலைவன் பிரிந்து சென்றபிறகு தனது பேச்சாற்றலால் தலைவனும், தலைவியும் கூடும் அளவிற்கான அறிவுஆற்றல், அறிவுகூர்மை

இப்பாடலில் வருகின்ற **"உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!"** என்ற அடி விளக்குகிறது, அதே போல் இல்லத்தில் தலைவி தலைவனை சந்திக்க இயலாமல் துன்பப்பட்டு துயரப்பட்டு அல்லல்பட்டு இல்லத்தில் இருக்கின்ற போது நற்றாய், செவிலித்தாய், இருவரும் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்வார்கள். வெறியாட்டலின் ஒரு பகுதியாக 'குறிக்கேட்டல்' நிகழ்வு நடைபெறுகிறது, குறிகேட்டல் நிகழ்வில் 'கட்டுவிச்சியிடம் தலைவியின் காதலை அறிவுப்பூர்வமாக வெளிப்படுத்துகின்ற திறன் தோழிக்கே உரியது. அத்தன்மையை கபிலர் **"அகவன் மகளே, அகவன் மகளே பாடுக பாட்டே"** பாடலில் தெளிவுப்படுத்துகிறார். தோழி இப்பாடலில் தனது அறிவுநயத்தை மிகச்சிறப்பாக கையாண்டு தனக்கே உரிய ஆளுமையினை வெளிப்படுத்துகிறாள். இப்பாடலில் வருகின்ற **"பாடுக பாட்டே இன்னும் பாடுக பாட்டே அவர்"** என்னும் தொடரில் 'அவர்' என்ற ஒரு வார்த்தையில் தோழி கட்டுவிச்சியை குறித்து கூறும்போது குறிஞ்சி நாட்டு தலைவனை தலைவி காதலிக்கிறாள். இருவரும் சந்திக்க நேராதலால் பசலை நோயினால் துன்பப்படுகின்றாள். என்று நற்றாய் இடத்திலும், செவிலித்தாயிடமும் குறியிடம் சொல்லி குறிப்பால் உணர்த்துகிறாள். இது போன்று அறிவுச் சான்று நிலையில் தோழி மிக முக்கிய வாயிலாக திகழ்கின்றாள். "களவுக் கடலில் தலைவியின் நெஞ்ச மரக்கலம் இடையீறு பாசறைகளின் இடையில் தடுமாறும்போது வடதுருவ விண்மீனாக விளங்கி வழிகாட்டுகிறாள். தலைவனின் நெஞ்சம் மயக்க இருளிலும், தளர்ச்சி மூடுபனியிலும், சிக்கித் தவிக்கும் போது அறிவுத் தீச்சுடராக அவள் உதவுகிறாள்"[6] என்னும் தோழியின் அறிவுத் திறனைக் கூறும் தொல்காப்பியர்

**"உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்**

**உரியதாகும் தோழிகண் உரனே"**

என்ற நூற்பாவின் வழிக் கூறுகிறார். இவ்வாறு தோழியிடம் அறிவுத்திறன் பண்பு மற்றும் அறிவாளுமையை காணலாம்.

தலைவியின் அகமும், புறமும் இருக்கும் உண்மை நிலையினைச் செம்மையாக அறிந்து கொள்ளும் திறன் உடையவள். தோழி தனது சொல்லாற்றலால் தலைவன் தலைவியை நெறிப்படுத்திச் சென்று அவர்களிடம் மனஉறுதியையும், சிறந்த பண்பாட்டையும் வளர்த்து சிறந்த நெறியாளராகவும் இருந்திருக்கின்றாள். இவ்வாறு தலைவியின் வாழ்வில் தோழியின் நட்பு, எந்த நிலையையும் சமாளிக்கும் திறன், தோல்வியில் கலங்காது நிற்கும் மனநிலை, அறிவுடைமை நிறைந்தவளாக அமைகின்றாள் தலைவியின் களவு வாழ்விலும், இல்லற வாழ்விலும் பெருந்துணை புரியவளாக ஆளுமைப்பண்பு உள்ளவளாக அமைவதை அகப்பாடல்கள் மூலம் உணரமுடிகிறது.

**தலைமக்கள் வாழ்வில் நற்றாய்**

நற்றாய் என்பவள் தலைவியை பெற்றெடுத்த தாய் ஆவாள். தலைவியின் களவொழுக்கம் பற்றி சரியான அறிதலும், புரிதலும் இல்லாதவள் நற்றாய். அலர் எழுதல், அவன் வருதல், செவிலி அறத்தொடு நிற்றல் ஆகியவற்றின் மூலமே தலைவியின் காதல் நற்றாய்க்குத் தெரிகிறது

ஒருவனது ஆளுமை வெளிப்பாட்டில் பொதுவாகக் காணப்படக்கூடிய பிறரால் எளிதில் அடையாளம் காணக்கூடிய பண்புக்கூற்றை ஆல்போர்ட் மையப்பண்புக் கூறு என்கிறார். மையப்பண்புக்கூறு என்பது "நட்புடன் பழகக்கூடிய சுறுசுறுப்புடைய, நன்னோக்குடைய கவனமாக நடந்து கொள்ளக்கூடிய கூர்ந்து நோக்குகின்ற நுண்ணறிவுடைய, உணர்ச்சி வசப்படக்கூடிய, ஊர்சுற்றுகிற என்பன போன்ற பல அடைமொழிகள் பலவும் மையப்பண்புக்கூறுகளை சுட்டக் கூடியவையே."[7] என்கிறார் இரா. காஞ்சனா. தலைவி உடன்போக்கு மேற்கொண்டது

அறிந்து வருந்தும் நற்றாய்க்கு அவள் பயன்படுத்திய பொருட்கள், பழகிய தோழியர், பயின்ற இடங்கள் ஆகியவற்றைக் காணும் போதெல்லாம் நினைப்பு மிகுகிறது.

**"தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து,**

**ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்,**

**நீர்வார் கண்ணேன் கலுழும் என்னினும்,**

**கிள்ளையும், 'கிளை' எனக் கூஉம்"** நற்.143:2-5

என்ற பாடலில் நற்றாய் ஓரை விளையாடும் பெண்கள், தலைவி பயின்று விளையாடிய நொச்சி வேலி, அவள் வளர்த்த கிளி ஆகியவற்றைப் பார்க்குந்தொறும் தனது துயரம் மேம்பட்டு, கண்ணீர் வெளிப்பட்டதை அறிவிக்கிறாள். இதே போன்று தலைவியின் ஆற்றாமை கொண்டு வருந்துகிறாள். அப்போது அவ்வருத்ததை கண்ட நற்றாய் கலங்குகிறாள்.

**"சொல்லிய முயலிப் பாஅய சிறகர்**

**வாவல் உகக்கும் மாலை, யாம் புலம்பப்**

**போகிய அவட்கோ நோவேன், தேமொழித்**

**துணைஇலள் கலிழும் நெஞ்சின்**

**இணைஏர் உண்கண் இவட்குநோ வதுவே"** ஐங். 378

என்ற பாடலில் தனக்குரிய உணவான பழத்தைத் தேர்ந்தெடுப்பதற்குப் பழம் கிடைக்கும் இடம் நோக்கிச் செல்ல முயன்ற விரிந்த சிறகுகளையுடைய வவ்வால் உயர்ந்து பறக்கும் மாலை பொழுதில், யாம் தனிமையுற்று வருந்துமாறு நம்மை விட்டுப் போன என் மகளுக்காக மிகுதியாக வருந்தமாட்டேன். ஆனால், இனியமொழி பேசும் தன் துணை ஆகிய தோழி என் மகளைப் பிரிந்து அவள் பொருட்டு அழும் நெஞ்சினையும் மையுண்ட கண்களையுமுடைய இவளுக்காக வருந்துவேன், நற்றாயின் **உணர்ச்சி வசப்படக்கூடிய** மையப்பண்புக்கூறு ஆளுமையினை காணப்படுகிறது, "மனிதன் உணர்ச்சிகளின் கலவையாகப் படைக்கப் பட்டுள்ளான் இதை உணர்ச்சியின் செயல்பாடானது நற்றாயின் கூற்றில் தென்படுகிறது"[8] என்கிறார் ஜோ.அருணாதேவி

சமூகத்துடன் தனிமனிதன் கொள்ளும் உறவுகளின் செயல்பாடுகளினால் ஏற்படும் முரண்களால் உண்டாகும் மனத்தவிப்பே அவனது நடத்தைகளுக்குக் காரணம் என்கிறார் **காரன்ஹார்ன்.** உடன்போக்கு சென்ற தலைவி காட்டு வழியில் விலங்குகள் தரும் அச்சத்தையும் பொருட்படுத்தாது உணவும் நீரும் கிடைக்காமல் வருந்துவாளே என்ற **மனதவிப்பை** நற்றாயிடம்

"**................................ சேய்நாட்டுச்**

**சுவைக்காய் நெல்லிப் போக்கு அரும்பொங்கர்**

**வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று,**

**வீசுனைச் சிறுநீர் குடியினள்"** நற்.271: 4-7

என்ற பாடலில் காணமுடிகிறது. தலைவி காட்டுவழியில் எப்படி செல்வாளோ என்று மனத்தவிப்பையும், ஏக்கபெருமூச்சையும் கவலையையும் கொண்ட நற்றாயின் செயல்களானது தலைவியின் மீதுள்ள அன்பையும் ஆளுமையும் கொண்டவளாக உள்ளாள் எனவும் காணமுடிகிறது.

**செவிலியின் ஆளுமை**

தலைவியின் வளர்ப்பிலும் இல்லற வாழ்விலும் நற்றாய், செவிலித் தாய் ஆகிய இருவருக்குமே பொறுப்பு உண்டு. தலைமக்களின் வாழ்வில் பெரும்பங்கு கொண்டு அவர்களுக்காகத் தொண்டாற்றும் ஒரு குடும்பத்தில் பிறந்த இரு தலைமுறையினராகிய செவிலியும், தோழியும் சிறப்பைப் பெறுகின்றனர். தலைவியைப் பெற்றவள் நற்றாய் என்றும், வளர்ப்பவள் செவிலி என்றும் அழைக்கப்படுகின்றனர். தலைவனும் தலைவியும் மேற்கொண்ட களவொழுக்கம் கற்பில் சிறந்த பின் இருவரும் நடத்தும் இல்லறம் கண்டு செவிலி. கற்பு வாழ்க்கை நிலையினை கண்டு பெருமை கொள்கிறாள். தன் மகளும், மருமகனும் ஒத்த அன்பினாய்க் கூடித் தம் புதல்வன் மழலைக் கேட்டும் விளையாட்டுக் கண்டும் யாழ் இசை கேட்கும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததை கண்டு மகிழ்ந்து. தலைவி குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய மனப் பக்குவம் பெற்றுள்ளதையும் புதல்வனோடு பொலிவதையும் கண்டு வந்து நற்றாய்க்கும் மற்றவர்களுக்கும் சொல்லி

**“புதல்நீர் வாரும் பூநாறு புறவில்**
**சீறூ ரோளே, மடந்தை வேறுஊர்**
**வேந்துவிடு தொழிலொடு செலினும்,**
**சேந்துவரல் அறியாது, செம்மல் தேரே”** குறுந்.242: 3-6

என்ற பாடலில் தலைவனது ஊர், தலைவன் - தலைவியிடையே இருக்கும் அன்பு பிணைப்பு ஆகியவற்றை செவிலி எடுத்துக் கூறுவதாக உள்ளது. தலைவியின் மேல் எவ்வளவு அன்பு உள்ளதோ அதே அளவு சிறுதேர் உருட்டித் தளர்நடை பயிறுதலைக் கண்ட சிறுவனிடம் காட்டும் அன்பு பெரியதாய் உள்ளது.

**“புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும்**
**அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றே”** ஐங். 403

சிற்றூரில் வாழ்ந்தாலும் தலைவனது பேரன்பில் திளைக்கிறாள் என்பது செவிலிக்கு மகிழ்வைத் தருகிறது. ஐங்குறுநூற்றில் பேயனார் எழுதியுள்ள செவிலி கூற்றுப் பத்து பாடல்கள் (401-410) தலைவியின் இல்லறச் சிறப்பைக் கண்டு வந்து கூறும் செவிலியின் புறமுக ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. தான் கண்ட காட்சியினை நற்றாய்க்கு கூறி அவளை மகிழ்விக்கின்றாள். இவ்வாறு கூறும் போது செவிலி மனம்திறந்து வெளிப்படையாக பேசுவதை காணலாம்.

**“மறியிடைப் படுத்த மான்பிணை போலப்**
**புதல்வன் நடுவணன் அகநன்றும்**
**இனிதுமன்ற அவர் இடத்தை முனிவின்றி**
**நில்நிற வியல் அகம்சுவை இய**
**ஈனும் உம்பரும் பெறவருங்க குரைத்தே** ஐங். 401

என்ற பாடலில் இதுவே இல்லற இன்பத்தின் உயர்வான ஒன்று என்பதை நற்றாக்கு உணர்த்தி தலைவியை பற்றிய அச்சத்தினை தவிர்க்கின்றாள் செவிலி. நற்றாயிடம் தலைவியின் இல்லற வாழ்வை கூறும் போதும் செவிலியின் வெளிப்படையாக கூறும் திறன் புறமுக ஆளுமை வெளிப்படுவதை காணலாம். செவிலி உடன்போக்கின் போது தலைவியின் நிலையினைக் கண்டு புலம்பும் போது அகமுக மனப்பான்மையும், கற்பில் தலைமக்கள் இல்லறம் கண்டு மகிழ்ந்து வெளிப்படையாக கூறும் செவிலியின் புறமுகமனப்பான்மையை காணமுடிகிறது. அகம், புறம் என்ற இரு மனப்பான்மையை இருமனப்போக்கு என்கிறார் யுங்.

**பாடினி**

யாழ் இசைத்துக் கொண்டே பாடக்கூடிய திறன் பெற்றவள். பாடினி என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் "பாடுபவள்" என கழகத்தமிழ் அகராதி பொருள் கூறுகின்றன. "பாண்மகள் என்பவள் பாணினத்துப் பெண்மகள் இவள் பெரிய அளவில் இசையோடு தொடர்புபடுத்தப்படவில்லை என்பதில் இருந்து பாண்மகள் எனப்படுவோர் பாணனுடைய மனைவியாகவோ மகளாகவோ இருக்க வாய்ப்பு உண்டு"[9] என்கிறார். "பாடினி தன் பஞ்சன்ன அடியை எடுத்து வைக்கிறாள், அசை நடை நடக்கிறாள், அந்நடையில் விரைதல் இல்லை, அதிர்தல் இல்லை, அழகின்மை இல்லை, "நடை என்றால் இப்படி இருக்க வேண்டும் 'இப்படி நடப்பதற்கென்று, இந்த மென்மை இயற்கைலாகாய் அமைந்திருக்க வேண்டும்'[10] என்று நயத்துரைக்கத் தக்க நடையாய் நடக்கின்றாள்.

**"வளைக்கை கிணைமகள்" (பதிற். 43:22)**

என்ற பாடலில் பாணனின் மனைவி "கிணைமகள்" அதாவது கிணை என்னும் பறையினை ஒலிக்கக் கூடிய பாணனின் மனைவி என்று சுட்டப் பெறுகின்றாள். "பாணரின் துணைவியாகவோ, உறவினராகவோ இவள் இருப்பாள்"[11] என்கிறார் கே. ஏ. குணசேகரன். சங்க இலக்கியத்தில் பாடினியின் முடி முதல் அடி வரையிலான எழில் நலம் போன்று பாடினி அழகும் விளக்கப்படுகிறது, உடற்கூறு அமைப்பினைப் பற்றி ஒரு பாடல்

**"அறல்போல் கூந்தல், பிறைபோல் திருநுதல்" (பொரு. ப. 25-47)**

என்ற பாடலில் கேசாதிபாத வருணனையாக உரைக்கப்பட்டுள்ளது. "பாடினி மெல்லியள், மெல்லியவாகப் பிறந்து அவ்வியல்பிலேயே **வளர்ந்து, மெல்லியல் கலைக்கே தன்னை ஆட்படுத்திக் கொண்டு,** மெல்லியல் கலைக்கே தன்னை ஆளாக்கிக் கொண்ட பாணனுக்கு காதலால் தன்னை ஆளாக்கிக் கொண்டவள்"[13] என்கிறார் இரா.இளங்குமரன்.

**"நல்யாழ் மருப்பின்மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்து" (புறம் 242, 2-4)**

என்ற பாடலில் தம்மை ஆதாரித்த மன்னன், வள்ளல் இறந்த நிலையில் மனத்துன்பம் கொண்டு, தம்மை ஆதரித்த யார் இருக்கிறார்கள் என்னும் துயரம் மேலிட ஒப்பனை செய்து கொள்ளலாமல் இரங்கற்பா பாடிய பான்மையினை பாடினியின் செயலினை காணமுடிகிறது.

பாசறையில் உடலாலும் மனதாலும் காயப்பட்டு கிடக்கும் வீரர்களது காயத்தினை மாற்றியும் போர்க்களச் சூழலை மறந்து புத்துணர்வு பெறவும் அவர்கள் வீரத்தையும் புகழினையும் பாடினர்.

**"உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை,**
**நிலவின் அன்ன வெள்வேல் பாடினி,**
**முழவில் போக்கிய வெண்கை**
**விழவின் அன்ன, நின் கலிமகி ழானே" (ப.பத்து. 61, 15-18)**

என்ற அடிகளில் வீர்களை ஊக்கப்படுத்தி அடுத்த நாள் போருக்கு வழிப்படுத்தும் மருந்தாகப் பாடினி விளக்கினாள். புலால் நாறும் பாசறையில் நில ஒளியைப் போன்று வெண்மையான ஒளியை வீசும் மன்னனின் வேற்படையைப் புகழ்ந்து பாடக்கூடியவள் பாடினி. போர்க்களத்தி பாடுவதும் நிலவு வரும் நள்ளிரவு பொழுதிலும் முழுவிசைத்து பாடி புண்பட்ட வீர்கள் கிடந்த போது உள்ளதை உள்ளவாறு போர்க்களத்து நிகழ்வுகளை புகழ்பவளாகவும், வீரத்தையும் புகழ்பவளாக இருந்த பாடினியின் குணத்தை அறிய முடிகிறது. போர்க்களத்தில் பகைவரை வென்ற வெற்றிச் சிறப்பையும், அரசனது வலிமையான வீரத்தைப் பாடினி காணப்பட்டாள் என்பதை,

**“விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்**

**பாடினி பாடும் வஞ்சிக்கு”(புறம் 15, 23-24)**

என்ற பாடலில் பாடினியின் பாடல் உச்சத்திற்கு அரசனது வலிமை உள்ளதை கூறும் போது பாடினியின் பாடல்திறன் வெளிப்படுவதை காணலாம். பாடினி மன்னன் இருக்கும் பாசறைக்குச் சென்று பாடியவளாக காணமுடிகிறது. இதனால் இவளை மன்னனுடன் இணைத்து

**‘பாடினி வேந்தே’ (பதிற். 14,7)**

என பாடினியின் போர்க்களத்து நிகழ்வை பாடி உரைக்கும் பான்மையும் பாடினியின் ஆளுமை வெளிப்படுவதை காணமுடிகிறது,

**பாடியின் பாடல் திறன் வலிமை**

தம் இலக்குகளையும் விருப்பங்களையும் அடைவதில் மிகுந்த ஈடுபாடும் உண்மையான உழைப்பும் கொண்டவர் சிறந்த ஆளுமை மேம்பாடு கொண்டவர்களாக இருப்பர். பாடினியின் பாடல் திறன் அரசனின் வலிமை திறனைப் போன்றது என்பதை,

**“மறம் பாடிய பாடினியும்மே**

**ஏர்உடைய வழுக்கழஞ்சின்,**

**சீர்உடைய இழைபெற்றிசினே,**

**இழைபெற்ற பாடினிக்குக்” (புறம் 11: 11-14)**

என்ற பாடலில் அறியமுடிகிறது. மேலும் பாடினி பாடிய பாட்டின் தாளத்திற்கு ஏற்பக் காட்டில் உறைகின்ற தெய்வமாகிய கொற்றவைக்குத் தம் கடன்களைச் செய்தனர் என்று

**“பெடைமயில் உருவின், பெருந்தகு பாடினி,**

**பாடினி பாணிக்கு ஏற்ப, நாள்தொறும்” (பொரு. 47-48) பாடலின் வழி பாடினியின்** பாடல்திறன் வெளிப்பாடும் ஆளுமையினை காணமுடிகிறது. பாடினியானவள் அரசர்களைப் போற்றும் மரபும், இசைமரபும், நன்கு அறிந்தவளாகக் காட்டப்பெறுகிறாள். மேலும் பாடினி போர்க்களத்தில் சென்று தனக்குரிய பணியை செய்கிறாள். இவ்வாறு பாடினியின் செயலின் வழி ஆளுமைப் பண்பினை என அறிய முடிகிறது,

தொல்காப்பியர். கற்பியலில் அறிமுகப்படுத்தப்பட்ட கலையுலக வாயில்களுள் விறலியும் ஒருத்தி ஆவாள். கற்பில் கூற்று நிகழ்த்துவதற்கான உரிமையையும் தொல்காப்பியர் விறலிக்கு அளித்துள்ளார் எனினும் விறலிக்கு உரிய கூற்றோ, மரபோ தொல்காப்பித்துள் யாண்டும் காணப்படவில்லை.

**சங்க இலக்கியத்தில் விறலி**

சங்க இலக்கியத்தில் சிறுகுடிப் பெண்களாகவும், கலைஞர்களாகவும் அடையாளப்படுத்தப்படும் விறலியர் அகம், புறம் என்னும் இருநிலைகளிலும் இடம் பெற்றுள்ளாள். அகப்பாடல்களில் விறலியின் கூற்று எங்கும் இடம்பெறவில்லை. ஆனால் கூற்றினை கேட்பவளாக விறலி வருகிறாள். விறலி என்பவள் நடன கலைக்கு உரியவள். பொருநருடனும், பாணருடனும், கூத்தருடனும் சென்று தன் கலைத்திறனை வள்ளல்களுக்கும் மன்னர்களுக்கும் காட்டிப் பரிசில் பெறுதல் விறலியரின் வழக்கமாகும். “விறலி என்ற சொல் சங்க இலக்கியத்தில் வீரத்தையும்

வெற்றியையும் வன்மையும் சிறப்பினையும் சுட்டும். எனவே வீர நிகழ்ச்சியைச் சுவைப்பட ஆடிப் பாடுவதினால் விறலியர் எனப்பட்டனர்"[13] எனக் கதிர்மகாதேவன் கூறுகிறார்.

**விறலியின் ஏற்பு ஆளுமை**

பரத்தையிடம் இருந்து திரும்பி வந்த தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காக விறலியைத் தூதாக அனுப்புகிறான். தலைவியின் ஊடலைத் தீர்க்க தலைவனால் வாயிலாக அனுப்பப்பட்ட விறலி தோழியினால் கடுமையான சொற்களால் பழிக்கப்படும் வாயில் மறுக்கவும் செய்வாள். ஏற்பு ஆளுமையினர் மற்றவரைச் சார்ந்தும் கீழ்ப்படிந்தும் இருப்பதோடு, தன்னுரிமையை நிலைநாட்ட அஞ்சுபவராகவும் இருப்பர். பாணனை போன்றே விறலியும் இகழ்ச்சிக்கு உள்ளாக்கப்படுகிறாள்.

**"மடக்கண், தகரக் கூந்தல், பணைத்தோள்,**

**வார்ந்தவால் எயிற்று, சேர்ந்துசெறி குறங்கின்,**

**பிணையல் அம்தழை தைஇ, துணையிலள்**

**விழவுக்களம் பொலிய வந்துநின் றனளே:**

**……………………………………………**

**…………………………………………….**

**பன்மையது எவனோஇவள் நன்மைதலைப் படினே?** நற். 170

என்ற பாடலில் விறலி அழகிய கூந்தலையும் பருத்த தோளையும், வெண்மையான பற்களைக் கொண்டு தனக்கு நிகரானவர் யாரும் இல்லை என்று கூறுவதற்கேற்ப அழகையுடைய விறலியைப் பாருங்கள். என்று தோழி தன் சுற்றாத்தாருடன் சென்று தலைவனைப் பாதுகாப்போம். இல்லையெனில் அவளது எண்ணம் ஈடேறி விடும் என்று தோழி விறலியை இகழ்ந்து கூறி வாயில் மறுக்கும் போதும் விறலி தலைவன் மீது தான் கொண்ட அக்கறையினால் தான் வாயிலாக தலைவியிடம் செல்கிறாள். விறலி தோழியின் இகழ்ச்சியை பொருட்படுத்தவில்லையெனினும் மாறாக, விறலி தலைவனின் உணர்வை புரிந்ததால் தான் தலைவியிடம் வாயிலாக செல்லுகின்றாள். வாயில் மறுக்கும் போது எந்த வித முரண்பாட்டையும் பாணன் போல் பழித்து கூறவில்லை. பழிச் சொல்லுக்கு ஆளானாலும் தலைவனுக்காக வாயிலாக மட்டுமே செல்கின்றாள். தோழியின் பேச்சும் செயலையும் கண்டு விறலி பொறுமையாக இருக்கின்றாள். பொறுமைக்கு எடுத்துக்காட்டாக நிலத்தைக் குறிப்பிடுவார் வள்ளுவர். நிலத்தை எவ்வளவு ஆழமாகத் தோண்டினாலும், தோண்டுபவரை விழாமல் தாங்கும் தன்மை உடையது பூமி. அதைப் போல தனிநபர்கள் தங்களை, இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ளுதல் இணையற்ற அறம் என்று குறிப்பிடுவதை,

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை** குறள் 151

என்ற குறள் மூலமாக அறிந்து கொள்ளலாம். தன் கருத்தை விறலி தோழியிடம் கூறவில்லை. தன் கருத்தை கூற இயலாத நிலையிலும், தலைவன் பால் கீழ்ப்படிந்தும் இருக்கும் நிலையை கொண்டு ஏற்புஆளுமையினை விறலியிடம் காணமுடிகிறது. இதே போன்று பல வாயில்களை மறுத்த தலைவி எனக்கு வாயிலாக நேர்ந்தாள் என்கிறாள் விறலி, அதனை, கணிதமேதவியார்,

**'கிழமை பெரியோர்க்குக் கேடிண்மை கொல்லோ**

**புழமை பயனோக்கிக் கொல்லோ – கிழமை**

**குடிநாய்கர் தாம்பல பொற்றாரிந்கேளா**

**அடிநாயேன் பெற்ற அருள்''** திணைமாலை நூற்றைம்பது பா. 134

எனப் புலப்படுத்துவர். மிகவும் தாழ்மை கொண்ட யான் தலையிடத்து வாயிலாக சென்றேன். என்னை தலைவி ஏற்று அருள் புரிந்தாள். அதனால் எனக்கு மிகழ்வு கிட்டியது என தோழியிடம் விறலி கூறுகிறாள்.

**போர் வீரருக்கு சமைக்கும் விறலி**

கலைகள் மட்டுமே விறலியின் திறன் வெளிப்படும் என்பது மட்டும் இல்லாமல் போர்காலங்களிலும் விறலி போர்வீரர்களுக்கு சமைத்து கொடுப்பவர்களாக உள்ளன என்பதை

**"கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே**

**பெற்றது உதவுமின் தப்பு இன்று பின்னும்'' (பதிற்றுப்பத்து பா. 18 வரி.6-7)**

என்ற பாடலின் வழியே அறியமுடிகிறது. மேலும் விறலியர் மன்னரது வெற்றியையும், போர்ச் செயல்களையும் அவனது ஊர்கள் தோறும் சென்று கலை நிகழ்வின் மூலம் விளக்கினர். எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் செய்திகளைப் பரப்பும் வண்ணம் செயல்படும் போது விறலியின் பொதிந்து கிடக்கும் சமூக ஆற்றல்களை வெளிப்படுவது அறிய முடிகிறது. மனிதனுக்கு சமூக ஈடுபாடு இயல்பிலேயே அமைவதாகும். விறலிக்கு அத்தகைய ஈடுபாடு இயற்கையிலேயே அமைந்துவிட்டது.

**துணங்கை ஆடிய வலம்படு கோமான்:**
**மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்**
**செல்லாமோதில் - சில்வளை விறலி**

**(பதிற்றுப்பத்து பா. 57, வரி 4 – 6)**

என்ற பாடலில் போர்களத்தில் சென்று கலைநிகழ்ச்சிகள் நடத்தி இன்புறுத்தும் விறலியை சமூக கடமையை கொண்டவளாய் உள்ளாள் என தெரிகிறது. "போர்க்களத்தில் பாடியமைத்து வெற்றி முகம் கண்டு தங்கியுள்ள மன்னனைக் கண்டு வெற்றிக் களிப்புச் சிந்தும் பாடல்களைப் பாடி ஆட்டம் நிகழ்த்தி மன்னனை வாழ்த்தும் ஒரு சமூக போராளியாக விறலி அமைகிறாள்" கரு. அழ. குணசேகரன் கூறுகிறார். விறலியர்கள் பாசறைக்கண் சென்று அரசவை வாழ்த்தும் உரிமையைப் பெற்றிருந்தனர். இவர்கள் தங்கள் கலைஞர் குழுவிற்கு முழுபொறுப்பாக இருந்து வழிப்படுத்தல் செய்தனர் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

தலைவன் - தலைவியிடையே எழும் சிக்கல்கள் கண்டு பழிப்பதும், பங்களிப்பதும், மகிழ்வதும் போன்ற செயல்பாடு தோழியிடம் காணமுடிகின்றன. தோழியின் மனத்திட்பம், நட்பாண்மை, தன்திறன்செயல்பாடு, விடாமுயற்சி போன்ற ஆளுமை தோழியிடம் காணப்படுகின்றன. தோழி தன்னிடம் அமைந்த மதிப்பீடு செய்யும் பண்பு, பேச்சாற்றல், அறிவாற்றல் போன்ற பண்புகளை கொண்டு முழுமையாக வளர்ச்சி பெற்று விளங்குகின்றாள் தோழி. பிரச்சனைகளை எளிதில் அறிதலும், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளைத் திட்டமிட்டு உருவாக்கும் ஆற்றல் தோழியிடம் இருப்பதை காணலாம். விடாமுயற்சி பண்பு காலப்போக்கில் அவை வளர்ச்சி பெற்று தோழியின் ஆளுமையை முழுமையாக்கியுள்ளன. தோழி தலைவியை ஆற்றுவிக்கின்றாள். ஒருவரை மாற்றுவது இந்த தன்னிறைவு தேவைகள் தான் இங்கு தலைவியை பல நிலைகளில் ஆற்றுவிக்கும் தோழியின் இந்த செயல் தன்னிறைவு பண்பு

வெளிப்படுகிறது. தலைவி சென்ற காட்டு வழியின் அருமை, கோடையின் வெம்மை, நிலத்தின் கடுமை, நீரற்ற வறட்சி நிலை, விலங்குகளால் ஏற்படும் அச்சம் ஆகியவற்றோடு, நெல்லிக்காயைத் தின்று சிறிதளவு நீரைப் பருகிப் பசியாறிச் செல்லுவதற்காக வருந்தும் நற்றாய்க்குத் தலைவி உடன்போக்கு மேற்கொண்டதைவிட அவள் அனுபவிக்கும் துன்பமே பெரிதாகப்படுகிறது. தலைவியின் களவு காலத்தில் தான் எச்சரிக்கையாக இருந்திருந்தால் தலைவியைத் தலைவனுடன் உடன்போகவிடாது செய்திருக்கலாம் என்ற ஏக்கமும் தனது விழிப்புணர்வின்மையால் தலைவி உடன்போய்விட்டாள் என்ற ஏமாற்றமுமே நற்றாயின் குரலில் ஒலித்து நிற்கின்றன. தலைவியின் குழந்தைமைச் செயல்பாடுகளையும் அவள் பழகிய பொருட்களையும் பயின்ற இடங்களையும் கண்டு புலம்பும் நற்றாய்க்கு, தனது குடும்பப் பெருமையை வெளிக்காட்டும் வகையில் தங்கள் வீட்டில் அவளது திருமணம் நடைபெறாமல் போன வருத்தம் மேலோங்கியிருக்கிறது.எனது செயல் எனக்கே வியப்பைத் தருகிறது. என்று புலம்பும் நற்றாயிடம் தவறுகள் ஏற்படின் தன்னிடமே குறைகாணல் என்னும் தன்னைத்தானே பின்னிறுத்துதல் என்ற அடிப்படைப் பண்புகள் **உணர்ச்சி வசப்படக்கூடிய** மையப்பண்புக்கூறு, மேலோட்டமான பண்புக் கூறுகள், போன்றவை நற்றாயின் ஆளுமைப்பண்பினை காணமுடிகிறது. செவிலி உடன்போக்கின் போது தலைவியின் நிலையினைக் கண்டு புலம்பும் போது அகமுக மனப்பான்மையும், கற்பில் தலைமக்கள் இல்லறம் கண்டு மகிழ்ந்து வெளிப்படையாக கூறும் செவிலியின் புறமுகமனப்பான்மையை காணமுடிகிறது. அகம், புறம் என்ற இரு மனப்பான்மையை இருமனப்போக்கு என்கிறார் யுங். தலைவியின் களவைக் கண்டறிய செவிலி எடுத்த முயற்சிகளும் களவை அறிந்த பின் அதனைக் கற்பாக்க முனைந்த முனைப்புகளும் செவிலியிடம் இருமனப்போக்கு உடையவனாக உள்ளதை காணமுடிகிறது. விறலி தோழியினால் கடுமையான சொற்களால் பழிக்கப்படும் வாயில் மறுக்கவும் செய்வாள். ஏற்பு ஆளுமையினர் மற்றவரைச் சார்ந்தும் கீழ்ப்படிந்தும் இருப்பதோடு, தன்னுரிமையை நிலைநாட்ட அஞ்சுபவராகவும் இருப்பர். பாணனை போன்றே விறலியும் இகழ்ச்சிக்கு உள்ளாக்கப்படுகிறாள். தன் கருத்தை விறலி தோழியிடம் கூறவில்லை. தன் கருத்தை கூற இயலாத நிலையிலும், தலைவன் பால் கீழ்ப்படிந்தும் இருக்கும் நிலையை கொண்டு ஏற்புஆளுமையினை விறலியிடம் காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 2, ப. 678

[2] க்ரியாவின் தமிழ் அகராதி, ப.121

[3] தமிழகராதி, ப. 3602.

[4] அபிதான சிந்தாமணி ப. 1410

[5] சரளாஇராஜகோபலான், சங்க இலக்கியத்தில் தோழி , ப. 15

[6] சரளா இராசகோபாலன சங்க இலக்கியத்தில் தோழி ப. 10.

[7] இரா.காஞ்சனா,ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும் ப. 17

[8] ஜோ.அருணாதேவி, தொல்காப்பியரின் உளவியல் பார்வை, ப. 96

[9] சு. கலைவாணி, தமிழ்கலை சங்க இயல் இசை ப. 89

[10] சங்க இலக்கியத்தில் குடும்பம், பக்தவச்சலபாரதி, ப. 49.

[11] கே. ஏ. குணசேகரன், சங்க இலக்கியச் சிந்தனைகள், ப. 84

[12] பா.பாணர், இரா. இளங்குமரன், ப. 49.

[13] ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம் ப. 158